தமிழ்நாடு மின் துறை பொறியாளர் அமைப்பு

**Tamilnadu Power Engineers Organisation**

TNPEO

Regd. No : 2998/CNI
Under Indian Trade Union Act, 1926
Afiliated : COTEE - EEFI

27, Mosque Street, Chepauk, Chennai - 600 005. Ph : 28548529, 28515038 Fax : 28516574 Web : www.tnpeo.org e-mail : tnpeogs@gmail.com

**R.Sridhar** Honorary President | **T.Arivazhagan** President | **K.Arulselvan** General Secretary | **K.Jeevanandham** Treasurer

ORGANISING SECRETARY
S.Appadurai

DEPUTY GENERAL SECRETARIES
M.Parimelazhagan
R.Guruvel
A.Palani

VICE PRESIDENTS
D.Kumar
V.K.Thanikaiarasu
M.Ramasubbu
G.Sankareswaran
P.Aarumugam
V.Lakshminarayanan
A.R.Alagarsamy
T.Karunambigai
A.Muruganantham
J.Engels
R.Gokulavarman

SECRETARIES
R.Adalarasu
P.Kumaresapandian
M.Muniraj
A.E.Arunachalam
R.Somasundaram
M.Mayilvaganan
G.Gopalakrishnan
M.Irudhayaraj
M.Anandhan
M.Panimalar
T.Subramaniyan

பெறுதல் நாள்: 07.02.2014

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின்சார வாரியம் ,
NPKRR மாளிகை,
800, அண்ணாசாலை,
சென்னை.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரியம் (வரை) - தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) பதவியில் இருந்து இளநிலை பொறியாளர் II நிலை, (JE II Grade) பதவி உயர்வு - வழங்கிட கோருதல் - தொடர்பாக.

பார்வை: CE/P/Chennai Letter No.046895/350/G31 /2012 -2 Dt.01.10.2012.

* * * * *

வணக்கம், தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்) பதவியில் பணிபுரிந்து வருபவர்களுக்கு. பார்வையில் கண்ட உத்தரவு வாயிலாக ஒரு வருடத்திற்கு முன்பாக தொழில்நுட்ப உதவியாளர் மின்னியல் பதவியில் இருந்து இளநிலை பொறியாளர் (மின்னியல்) II நிலை பதவி உயர்வு வழங்கிட தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டு, தகுதியானவர்கள் அனைவருக்கும் தகுதிகாண் அறிக்கையை சம்மந்தப்பட்ட அனைத்து மேற்பார்வை பொறியர்களும், வாரிய தலைமைக்கு, பல மாதங்களுக்கு முன்பே சமர்பித்துள்ளார்கள். ஆனால் இது நாள் வரை எங்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் தற்போது துணைமின்நிலையங்களில் 1000 -த்திற்கும் மேற்பட்ட JE II Grade பதவிகள் காலியாக உள்ளன. தற்போதுள்ள மின்பற்றாகுறை சூழலில், துணைமின் நிலையங்களில் இந்த பதவிகள் காலியாக இருப்பதால் மின் நுகர்வோர் சேவை என்பதும் பெரிதாக பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் நீதிமன்ற வழக்குகள் காரணமாக TA பதவியில் இருந்து மின்னியல் JE II Grade பதவிக்கு பதவி உயர்வு வழங்காமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல் அறிகிறோம். இது குறித்து கீழ்கண்ட விபரங்களை பணிவுடன் சுட்டிக்காட்டிட விரும்புகிறோம்.

1. இது வரை எந்த வழக்கின் மூலமும் "TA வில் இருந்து மின்னியல் JE II Grade பதவி உயர்வு வழங்க கூடாது" என்று நீதிமன்ற தடை உத்தரவு எதுவும், யாராலும் "பெறப்படவில்லை" என்பதால் பதவி உயர்வு வழங்கிட எந்த நீதிமன்ற தடையும் இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

2. களப்பிரிவில் பகுதிநேர பட்டயம் பெற்றவர்கள், உள்முக தேர்வு மூலம் TA பதவிக்கு வராமல், களபிரிவில் உள்ள CI/LI, FM, Special Grade FM ஆகிய பதவிகளின் பயன்களை அனுபவித்துக்கொண்டே, உயர்நீதிமன்ற தீர்ப்பின் மூலம் TA க்கு வழங்கப்படும் Ratio மூலம் நேரடியாக JE II Grade பதவி உயர்வு பெற்றிட தீர்ப்பு பெற்றதில் வாரியம் ஒருபகுதியினருக்கு (69 நபர்கள்) முன்தேதியிட்டு JE II Grade பதவி உயர்வு வழங்கியது. இதில் JE II Grade-ல் முன்தேதியிட்டது சரியானது இல்லை என்பதை வாரியம் உணர்ந்ததால் வாரியம் அந்த நீதிமன்ற தீர்ப்பின் மீது "**மறு சீராய்வு மனு**" (Review Petition) தாக்கல் செய்து இருப்பதாக அறிகிறோம்.

இந்த சூழலில் மேற்கண்ட தீர்ப்பை அடிப்படையாக கொண்டு தொடர்சியாக 50 க்கும் குறைவானர்கள் பகுதி நேர பட்டயம் முடித்து, உள்முக தேர்வுமூலம் TA பதவிக்கு வாராமல் LI/CI, FM, Special Grade FM ஆகிய பதவிகளில் பணியாற்றிக்கொண்டே TA -வின் Ratio அடிப்படையில் JE II Grade கேட்டு உயர்நீதிமன்றத்தில் பெறப்பட்ட தீர்ப்பு மீதுள்ள பிரச்சனை மட்டுமே நிலுவையில் உள்ளது. இதிலும் நீதிமன்ற தடை உத்தரவு எதுவும் இல்லை.

எனவே வாரியம் மேற்கண்ட 50க்கும் குறைவனவர்களின் பிரச்சனைக்காக, எந்த நீதிமன்ற தடையும் நிலுவையில் இல்லாத நிலையில், 1000 க்கும் மேற்பட்ட JE II Grade (மின்னியல்) பதவிகள் காலியாக உள்ள நிலையில், பிரச்சனைக்கு உரிய 50 க்கும் குறைவான பதவிகளை மட்டும், வாரியம் முடிவு எடுக்கும் வரை காலியாக வைத்துக்கொண்டு, எஞ்சிய 950 க்கும் மேற்பட்ட இளநிலை பொறியாளர் II நிலை (JE II Grade) பதவிகளை நிரப்பிட கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தற்போது நேர்முக தேர்வு மூலம் 4000 கள உதவியாளர்களையும், 10500 மஸ்தூரில் இருந்து கள உதவியாளர்களாகவும் பதவி உயர்வு வழங்கிட வசதியக தற்போது பணிபுரியும் கள உதவியாளர்களுக்கு 14.02.2014 க்குள் CA/WM பதவி உயர்வு வழங்கிட உத்தரவிட்டது போல தற்போது நேர்முக தேர்வு மூலம் தற்போது காலியாக உள்ள 1000 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை நிரப்பிட உள்ளதால், தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் இருந்து இளநிலை பொறியாளர் II நிலை பதவி உயர்வு விரைந்து வழங்கிட கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

(K. அருள்செல்வன்)
பொதுச்செயலாளர்.

நகல்- தலைமை பொறியாளர்/பணியமைப்பு/தமிழ்நாடு மின்சார வாரியம்.